1982, பிப்ரவரி 6]

என்று கருதுகிறேன். அது என்னுடைய தொகுதியில் இருக்கிறது. அந்த பல் வைத்திய மருத்துவத் துறையில் உள்ள ஊர்தி பழுதடைந்து, 2, 3 ஆண்டுகளாக அப்படியே இருக்கிறது. அதைத் தான் திரு. பொன்னுரங்கம் அவர்கள் சொல்லுகிறார்கள். வேண்டுமென்றால், நாளைக்கே என்னுடன் வந்தால், அதைக் காண்பிக்க நான் தயாராக இருக்கிறேன்.

[முற்பகல் 10.20]

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : அதைத் தான் சொன்னேன். மூலக் கேள்வியில் எழுப்பப்பட்ட ஊர்திகளுக்கும் இதற்கும் தொடர்பு இல்லை என்று சொன்னேன். அதை ஒத்துக்கொள்வார்கள் என்று கருதுகிறேன். அடுத்தபடியாக இன்னொரு ஊர்தி பற்றிச் சொன்னார்கள். பொன்னுரங்கம் அவர்கள் பொறுமையோடு கேட்க வேண்டும். அந்த ஊர்தியும் ரிப்பேர் செய்யப்பட்டு இப்போது செயல்பட்டுக் கொண்டிருக்கிறது. நீங்கள் தற்போது சொல்லுகின்ற ஊர்தி ஒன்றரை லட்சம் ரூபாய் மதிப்புள்ள ஊர்தி. அது ரிப்பேர் செய்யப்பட்டு இயங்கி வருகிறது என்பதை லேட்டஸ்ட் இன்பர்மேஷனாகத் தருகிறேன்.

போக்குவரத்துக் கழக தொழிலாளிகளின் குழந்தைகளுக்கான இலவச பயணச் சீட்டுகள்.

*வினா எண். 78—திரு. சீ. சிவப்பிரகாசம் : மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடை அளிப்பாரா—

போக்குவரத்து கழக தொழிலாளர்களின் குழந்தைகள் பள்ளிக்குச் செல்ல பேருந்துகளில் இலவச பயணச் சீட்டு வழங்கப்படுமா ?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: ஆம். போக்குவரத்துக் கழக தொழிலாளர்களின் குழந்தைகள் தங்கள் வீட்டிலிருந்து பள்ளி மற்றும் கல்லூரிக்குச் சென்று திரும்பி வர இலவச பயணச் சீட்டுகள் வழங்கப்பட்டு வருகின்றன. இந்தச் சலுகை தொழிலாளர்களின் இரண்டு குழந்தைகளுக்கு மட்டும் கொடுக்கப்படும்.

திரு. சீ. சிவப்பிரகாசம் : இந்தச் சலுகை எந்த ஆண்டு முதல் வழங்கப்பட்டுள்ளது ? அதன் எண்ணிக்கை எவ்வளவு ? அதனால் அரசுக்கு ஏற்பட்ட செலவு எவ்வளவு ?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: இந்த அரசு ஏற்பட்ட பின்பு 15—9—1977 முதல் இது கொடுக்கப்பட்டு வருகிறது. இதற்கு ஆகும் மொத்தச் செலவு எவ்வளவு என்ற கணக்கு தற்போது இல்லை. தனிக் கேள்விபோட்டால் தகவல் தருகிறேன்.

[1982 பிப்ரவரி 6

திரு. சி. சிவப்பிரகாசம் : இந்தச் சலுகையானது போக்கு வரத்து நடத்துனர், ஓட்டுநராகப் பணிபுரியும் தொழிலாளர்களுக்கு மட்டுமா அல்லது போக்குவரத்து அலுவலகத்தில் பணிபுரியும் அலுவலர்களுக்கும் இந்தச் சலுகை பொருந்துமா ?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : போக்குவரத்துக் கழகத்தில் பணியாற்றும் அத்தனை தொழிலாளர்களுக்கும் இந்தச் சலுகை பொருந்தும்.

திரு. ப. நெடுமாறன் : சென்னை நகரத்தில் மாணவர்களுக்கு அளிக்கப்படுகிற பஸ் பாஸ் சலுகை எல்லா ஊர்களிலும் அளிக்கப்படுமா ?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : இது தொழிலாளர்கள் குழந்தைகள் பற்றிய கேள்வி. மாணவர்களைப் பற்றித் தனியாகக் கேள்வி போட்டால் அது பற்றி எடுத்துச் சொல்ல வசதியாக இருக்கும்.

திரு. இரெ. இராசமாணிக்கம் : தொழிலாளர்களுடைய இரண்டு குழந்தைகளுக்கு மட்டும் பாஸ் வழங்கப்படுவதாக அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். எல்லாக் குழந்தைகளுக்கும் பாஸ் வழங்க அனுமதி வழங்குவார்களா ?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : நம்முடைய மத்திய அரசாங்கமும் மாநில அரசாங்கமும் இரண்டுக்கு மேல் வேண்டாமென்று கோடிக்கணக்கான ரூபாய்களைச் செலவழித்துக் கொண்டு இருக்கிறோம். அதற்கு உறுதுணையாக இருக்கும் வகையில் இரண்டு குழந்தைகளோடு நிறுத்திக் கொள்ள வேண்டுமென்ற முறையில் இரண்டு குழந்தைகளுக்கு மட்டும் கொடுப்பதாக அரசு நடவடிக்கை எடுத்திருக்கிறது.

திரு. மு. அம்பிகாபதி : ஒரு தொழிலாளிக்கு மூன்று குழந்தைகள் இருந்து இரண்டு பிள்ளைகள் பாசிலும் ஒரு பிள்ளை டிக்கட் எடுத்துக் கொண்டும் போகவேண்டுமென்று சொன்னால் அந்த மூன்றாவது குழந்தைக்கு இன்ஃபிரியாரிடி காம்ப்ளக்ஸ் ஏற்படும். இந்தத் தகப்பனுக்குப் பிள்ளைதானா என்ற எண்ணம் அந்தப் பிள்ளைக்கு ஏற்பட்டுவிடுமாதலால் பிஞ்சு மனத்தில் உளைச்சல் ஏற்படுத்தும் போக்கைக் கைவிட அரசு முன் வருமா ?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் மூன்று குழந்தைகள் இருக்குமானால் என்று கேட்டார்கள். நாம் மாதா மாதம் அனுமதிச் சீட்டு தருகிறோம். ஒரு மாதம் ஒரு குழந்தைக்கும் இன்னொரு மாதம் இன்னொரு குழந்தைக்கும் அனுமதிச் சீட்டை எடுத்துக் கொண்டால் கருத்து வேறுபாடு வராது.

1982 பிப்ரவரி 6]

திரு. து. புருஷோத்தமன் : திருவள்ளுவர் போக்குவரத்து கழகத்தில் பத்திரிகை ஆசிரியர்கள், நிருபர்களுக்கு இலவசமாகப் போக அனுமதி வழங்க அரசு முன்வருமா ?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தொழிலாளர்களுடைய குழந்தைகளுடைய பக்கத்தில் இருந்து வேறு பக்கம் போயிருக்கிறார்கள். அதைப் பற்றி தனிக் கேள்வி போட வேண்டும். இருந்தாலும் திருவள்ளுவர் போக்குவரத்துக் கழகத்தில் அனுமதிக்க முடியாத நிலைமையில் இருக்கிறோம். மற்றப் போக்குவரத்துக் கழகங்களில் விரிவு படுத்தியிருக்கிறோம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

தேவகோட்டை—கன்னங்குடி நகரப் பேருந்துப் பணி

*வினா எண். 79—திரு. ச. அங்குசாமி : மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தேவகோட்டை நகராட்சியிலிருந்து கன்னங்குடி வரைக்கும் நகரப் பேருந்து விட அரசு முன் வருமா ?

(ஆ) ஆம் எனில், என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : (அ) மற்றும் (ஆ) தேவகோட்டை—கன்னங்குடி வழி தடத்தில் இரண்டு பேருந்து கள் 14 தனி நடைகள் சென்றுகொண்டிருந்தன. 8—5—1981 முதல் தேவகோட்டை—கன்னங்குடிக்கு இடையே இரண்டு கூடுதல் தனி நடைகள் செல்ல பாண்டியன் போக்குவரத்து கழகத்தின் பேருந்துக்கு அனுமதி வழங்கப்பட்டு உள்ளது. புள்ளி விவர கணக்கின்படி பயணிகளின் விகிதாசாரம் குறைவாக இருப்பதால் தேவகோட்டை—கன்னங்குடி வழித் தடத்தில் நகரப் பேருந்து விடுவதற்கு சாத்தியக் கூறுகள் இல்லை.

திரு. ச. அங்குசாமி : கன்னங்குடி ஊராட்சி ஒன்றியத்தைப் பொறுத்த வரையில் அதைச் சுற்றியுள்ள கிராமங்கள் எல்லாம் போக்குவரத்து வசதியில்லாத இடங்களாக இருக்கின்றன. அந்த இடங்களுக்குச் செல்ல வேண்டுமென்றால் கன்னங்குடிக்கு வந்து தான் போகக் கூடிய நிலைமை இருக்கிறது. அதைப் போலவே மற்ற நகரங்களுக்கோ அல்லது பெரிய இடங்களுக்கோ செல்வது என்றால் கன்னங்குடிக்கு வந்துதான் செல்லக்கூடிய சூழ்நிலை இருக்கிறது. ஆகவே கன்னங்குடியிலே நகரப் பேருந்து விடு வதற்கு அரசு முன் வருமா ?